


தீவிரவாதத்துக்கு எதிரான உலகு தழுவிய யுத்தம் என்று, அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் அறிவித்தது 'லோகக்ஷேமத்துக்காக' என்று அவரது அமைச்சரவை சகாக்களும் சி.ஐ.ஏ. அதிகாரிகளும் வாய் ஓயாமல் லவுட் ஸ்பீக்கர் வைத்துக் கத்திக்கொண்டிருந்தாலும், அது முற்றிலும் சுயநலம், பழிவாங்கும் இயல்பு மற்றும் மத்தியக் கிழக்கில் ஓர் அச்சுறுத்தலை நிரந்தரமாக்குவதற்கான மிகப்பெரிய முயற்சி என்பதுதான் உண்மை.

இது புரியாதவர்கள் யாரும் இல்லை. ஆனால், புரியாத மாதிரி காட்டிக் கொள்ள வேண்டியது அன்றைய காலகட்டத்தின் கட்டாயமாக இருந்தது. அல் காயிதாவின் இரட்டை கோபுரத் தகர்ப்பு மற்றும் பாதுகாப்பு அமைச்சகக் கட்டடம் மீதான விமானத் தாக்குதல் சம்பவங்களை அமெரிக்காவினுடைய ஆன்மாவின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலாக அமெரிக்க மீடியாக்கள் விரித்துக் காட்டின. அந்த நிலைமையில் உணர்ச்சிப் பிழம்பாக இருந்த அமெரிக்க மக்களைச் சமாதானப்படுத்துவதற்கும், கிடைத்த சந்தர்ப்பத்தில் ஆப்கனை அமுக்கிப் பிடிப்பதற்கும் பயன்படுத்திக் கொள்ள அமெரிக்கா நினைத்தது.

இந்த அரசியல் சூதாட்டத்தில் பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷரஃப் வலுக்கட்டாயமாக பலியாடு போல் இழுத்துவரப்பட்டார். வேறென்ன செய்யமுடியும்? ஒன்று என் பக்கம், அல்லது எதிரியின் பக்கம் என்று பெரியண்ணன் சொல்லிவிட்ட பிறகு, நடுநிலைமையெல்லாம் காக்க முடியுமா என்ன?

எனவே, பாகிஸ்தானின் பல விமானத் தளங்கள் அமெரிக்க விமானங்கள் நடைபயிலும் பிராந்தியங்களாயின. சாலையோரத் தண்ணீர்ப் பந்தலில் அநாயாசமாக நுழைந்து ரெண்டு கிளாஸ் எடுத்துக் குடித்துவிட்டுப் போகிற மிஸ்டர் பொதுஜனத்தைப் போல, பாகிஸ்தான் விமான நிலையங்களில் அமெரிக்கப் போர் விமானங்கள் பெட்ரோல் போட்டுக்கொண்டு ஆப்கனிஸ்தான் காடுகளுக்குப் போய் குண்டு வீசின.

முஷரஃப் பார்த்துக்கொண்டு சும்மாதான் இருந்தார். கொஞ்ச நாள்தான். எங்கே சும்மா இருந்தாலும் உதைப்பார்களோ என்று பயந்து, தன் பங்குக்குத் தானும் பாகிஸ்தானில் உள்ள சில மதரஸாக்களில் ரெய்டு விட்டார். தீவிரவாதிகளைக் கண்டுபிடித்து அழிக்கும் செயல்திட்டம். கராச்சியிலும் லாகூரிலும் அப்படிப் பல முகாம்கள் காலி செய்யப்பட்டன. காலி செய்துகொண்டு கிளம்பியவர்கள் அத்தனை பேரும், முஸஃபராபாத்துக்குத் தான் போனார்கள். உள்ளுக்குள் கோபத்தை வளர்த்துக்கொண்டு, அங்கிருந்தபடியே முஷரஃபின் காருக்கு குண்டு வைக்க ப்ளான் போட்டுத் தோற்றார்கள்.

இந்தத் தோல்வி அவர்களை இன்னும் கோபம் கொள்ளச் செய்தது. என்ன மனிதர் இவர்! இவரையா நம்பினோம்? இவரா காஷ்மீரை மீட்கக் கூடியவர்? இவரை நம்பியா நவாஸ்

ஷெரீஃபைத் துரத்தியடித்தோம்?

லஷ்கர் என்றில்லை. அன்றைய தேதியில் பாகிஸ்தானின் அத்தனை தீவிரவாத இயக்கங்களுமே அட்சரம் பிசகாமல் இப்படித்தான் நினைத்தன. என்ன ஒரே வித்தியாசம், மற்ற இயக்கங்கள் அனைத்தும் கோபப்பட்டதுடன் நிறுத்திக் கொண்டார்கள். வெறுப்பை வளர்த்துக் கொண்டு, தக்க சமயம் வரும்போது, பாயலாம் என்று பதுங்கினார்கள். லஷ்கர் மட்டும்தான் உடனே, உடனே செயல் என்று களத்தில் இறங்க முடிவு செய்தது.

தனது செயல்திட்டத்தில் இருந்த மற்ற அத்தனை பாயிண்டுகளையும் எச்சில் தொட்டு அழித்துவிட்டு பக்கம் முழுக்க காஷ்மீர் என்று கொட்டை எழுத்தில் சிவப்பால் எழுதினார்கள். அதைத் தவிர, இனி வேறு எது குறித்தும் சிந்திப்பது கூட இல்லை என்று முடிவு செய்தார்கள். என்னவாவது செய்து காஷ்மீரை மீட்டே தீருவது என்று வீர சபதம் செய்தார்கள். கார்கில் தோல்வி, பாகிஸ்தான் அரசுக்கு ஏற்பட்டதல்ல. தனிப்பட்ட முறையில், உணர்ச்சியுள்ள ஒவ்வொரு பாகிஸ்தானியனுக்கும் ஏற்பட்ட படுதோல்வி என்று நினைத்தார்கள். குறிப்பாக, லஷ்கர் என்னும் லட்சியவாத இயக்கத்தின் கனவின் ஒரு பகுதியை அரசியல் குரங்குகள் பிய்த்துப் போட்டுவிட்ட கோபம் அவர்களுக்கு இருந்தது.

அந்தக் கோபத்தின் விளைவாகத்தான் அவர்கள் முடிவு செய்தார்கள். 'யாரும் தேவையில்லை. எந்த உதவியும் வேண்டாம். தோள் கொடுக்க இனி பாகிஸ்தான் உளவுத் துறை கூட அவசியமில்லை. நானே போரிடுவேன். நானே ஜெயிப்பேன். இலக்கு இனி காஷ்மீர் மட்டும்.'

ஆகவே, அவர்கள் தன்னந்தனியே ஆயுதம் தூக்கி, எல்லை கடந்தார்கள். அது அப்போது ஐ.எஸ்.ஐ.க்குக் கூடத் தெரியாது.

1996 ஜனவரி 5-ம் தேதிதான் முதன்முதலாக லஷ்கர் இ தொய்பா காஷ்மீரில் தாக்குதல் நிகழ்த்தியது. தோடா மாவட்டத்தில் பர்ஷல்லா என்கிற கிராமத்தைச் சேர்ந்த பதினாறு ஹிந்துக்களை அப்போது அவர்கள் கொன்று, கணக்கை ஆரம்பித்தார்கள்.

அதன்பிறகு, எத்தனையோ சிறியதும் சற்றே பெரியதுமான தாக்குதல்கள், கொலைகள் நிகழ்த்தப்பட்டிருந்தாலும், முழு வேகத்துடன், உக்கிரம் கொப்பளிக்கத் தாக்கத் தொடங்கியது, இந்த கார்கில் யுத்தத்திற்குப் பிறகுதான்.

1999 மே மாதத் தொடக்கம் முதல் அதே ஆண்டின் ஜூலை முதல் வாரம் வரை நிகழ்ந்த யுத்தம் அது. அதே ஜூலை மாதம் 18-ம் தேதி லஷ்கரின் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிரடிப்படை ஒன்று இந்திய எல்லைக்குள் ஊடுருவியது. இது கார்கில் யுத்தத்தில் பங்கெடுக்காத படைப்பிரிவு. அதற்கு முன்னர், பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தின் எல்லையில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தவர்கள்.

அவர்களுக்கு இடப்பட்டிருந்த உத்தரவு மிகத் தெளிவானது. 'பாகிஸ்தான் எல்லையை ஒட்டிக் கொண்டிருக்கும் இந்தியப் பகுதி, காஷ்மீரின் தோடா மாவட்டத்துக்குள் நுழைந்து ஏதாவது ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுங்கள். அநேகமாக அது முதலில் கண்ணில் படும் கிராமமாக இருக்கலாம். நாம் செயல்படத் தொடங்கிவிட்டோம் என்பதை ஒரு கொத்துக் கொலையின் மூலம் அறிவித்துவிட்டுத் திரும்பிவிடுங்கள். அவ்வளவுதான்.'

எனவே, அவர்கள் லயாட்டாவுக்குள் நுழைந்தார்கள். விடிந்தும் விடியாத காலைப்பொழுது. உறக்கத்தில் இருந்த மக்கள். தேநீர்க் கடைகள் கூடத் திறந்திருக்கவில்லை. ஆளரவமற்ற கிராமத்தின் சாலையில், அந்த இருபத்தைந்து லஷ்கர் தீவிரவாதிகள் வானை நோக்கிச் சுட்டபடியே ஓடிவந்தார்கள். முகமூடி அணிந்தவர்கள். தோளில் ஒன்றும் கையில் ஒன்றுமாக ஒவ்வொருவரும் இரண்டு மெஷின் கன்கள் வைத்திருந்தார்கள். இடுப்பில் கட்டப்பட்டிருந்த தோலால் ஆன உறையில் தோட்டாக்கள் நிறைந்திருந்தன.

சத்தம் கேட்டுக் கண்விழித்த கிராமத்து மக்கள் வீதிக்கு வர, வானை நோக்கிச் சுட்டுக் கொண்டிருந்த துப்பாக்கிகள் அவர்களது நெஞ்சை நோக்கி வெடிக்கத் தொடங்கின. இருபது நிமிடங்கள் நிகழ்ந்த தாக்குதல் அது. மொத்தம் பதினைந்து பேர் வீதியில் பிணமாக விழுந்தார்கள். அத்தனை பேரும் ஹிந்துக்கள். அவர்களது நோக்கம் அதுதான். மிகத் தெளிவாக இருந்தார்கள். காஷ்மீரில் தாக்குதல். விழுபவர்கள் ஹிந்துக்களாக இருக்க வேண்டும்.

சிதறிய ரத்தத் துளிகள் வீதியை நிறைக்க, நினைத்தது நடந்துவிட்ட மகிழ்ச்சியில் அவர்கள் மீண்டும் எல்லை தாண்டி ஓடிப்போய் காணாமல் போனார்கள். பாதுகாப்புப் படையினருக்கு விஷயம் தெரிந்து வந்து சேர்வதற்குள் விடிந்துவிட்டிருந்தது.

கார்கில் யுத்தம் நடந்து கொண்டிருந்த மாதங்களில், இம்மாதிரியான அதிரடித் தாக்குதல்கள் ஏதும் கிராமத்து மக்கள் மீது நிகழ்த்தப்படவில்லை. காஷ்மீர் மக்களைப் பொறுத்தவரை மூன்று மாதகால அமைதி என்பது மிகப்பெரிய விஷயம். தவிரவும் யுத்த சமயத்தில் உள்நாட்டுப் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டிருந்ததால், மாநிலத்தின் மூலை முடுக்கெங்கும் மிகத் தீவிரமான கண்காணிப்புகள் இருந்தன. மக்கள் நிம்மதியாகத் தூங்கினார்கள். கண்ணுக்கெட்டும் தொலைவில் யுத்தம் நடந்து கொண்டிருந்தது என்பது உண்மைதான். ஆனாலும் அவர்கள் அப்போது தேசமே தங்களை அரவணைத்துக் கொண்டிருப்பதாக உணர்ந்தார்கள்.

ஆனால், யுத்தம் முடிந்த சில தினங்களுக்குள் நடந்த இந்தத் தாக்குதல், காஷ்மீர் மாநிலம் முழுவதும் மிகப்பெரிய அதிர்ச்சி அலைகளை உண்டாக்கியது. யுத்தத்தின் வெற்றிக்காக சந்தோஷப்படவோ, ஆடிப்பாடிக் களிக்கவோ முடியாமல் மீண்டும் அவர்கள் ஒடுங்கிப் போக ஆரம்பித்தார்கள்.

மூன்று முழு மாதங்கள். நடந்த சம்பவத்தின் அதிர்ச்சி சற்றே தணியத் தொடங்கிய நேரம். சற்றும் எதிர்பாராவிதத்தில் தங்களது அடுத்த தாக்குதலை நிகழ்த்தியது லஷ்கர். இம்முறை இன்னும் பயங்கரம்.

பதாம்பாக் (Badamibagh) என்கிற இடத்தில் இருந்த ராணுவத் தலைமையகத்தை இப்போது அவர்கள் குறிவைத்தார்கள். மிகவும் ஒதுக்குப் புறமாக இருந்த அலுவலகம் அது. சாதாரணமாகவே போக்குவரத்து இருக்காது. மிலிட்டரி ஹெட் குவார்ட்டர்ஸ் என்று ஆனபிறகு, காற்று கூட யோசித்தே உள்ளே வரும். நான்கு திசைகளிலும் தீவிரக் கண்காணிப்பு இருக்கும். இரவு பகல் ஷிப்ட் போட்டுக் காவலர்கள் பிராந்தியத்தைச் சுற்றி வந்துகொண்டே இருப்பார்கள்.

அப்படிப்பட்ட இடத்தைத் தாக்குவது என்று முடிவு செய்ததும், முஸஃபராபாத்திலிருந்து அல்லாமல், ஸ்ரீநகரிலிருந்தே இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து அனுப்பிவைத்தது லஷ்கரின் ஹை கமாண்ட்.

ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். காஷ்மீர் மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் லஷ்கருக்கு அறிவிக்கப்படாத அலுவலகம் ஒன்று உண்டு. ஆபீஸர்கள் உண்டு. வீரர்களின் படைப்பிரிவுகள் உண்டு. நிதி வசூல் கோஷ்டி உண்டு.

இதெல்லாம் உண்டு என்று இந்திய ராணுவத்துக்கும் தெரியும். முடிந்தவரை தேடித்தேடி அழிக்கத்தான் பார்க்கிறார்கள். ஆனாலும் அத்தனை சுலபத்தில் நெருங்க முடியாத நெருப்பு வளையம் அது. எங்கிருந்து கிளம்புகிறார்கள், எத்தனை பேர் கிளம்புகிறார்கள், எங்கே ஒன்று சேருகிறார்கள், காரியத்தை முடித்துவிட்டு எங்கே ஓடி மறைகிறார்கள் - ம்ஹூம். இன்றுவரை ஒரு தெளிவான வரைபடம் கிடைத்தபாடில்லை. அப்படியொரு நேர்த்தியான பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, பாதம்பாக் ராணுவ முகாம் இருந்த இடத்துக்கு லஷ்கர் ஆட்கள் வந்தவிதம் யூகத்தால் கூடக் கண்டறிய முடியாதது.

மரங்கள் அடர்ந்த பிராந்தியம். ராணுவக் காவலர்களின் கண்ணில் பனியைத் தூவிவிட்டு ஆளுக்கொரு மரத்தின் பின்னால் பதுங்கிக்கொண்டார்கள். அவர்களது நோக்கம் இம்முறை சற்று சிக்கலானது. ராணுவ முகாமைக் கைப்பற்றும் உத்தேசத்தில் வந்திருந்தார்கள். உள்ளிருக்கும் அத்தனை பேரையும் கொன்றுவிட்டு ஆயுதங்களை எடுத்துப் போவது நோக்கம்.

ஆனால், அது அத்தனை சுலபமல்ல என்பது அவர்களுக்குத் தெரியும். ஒரு சரியான சந்தர்ப்பத்துக்காகச் சில மணி நேரங்கள் காத்திருந்தார்கள்.

எங்கோ போய்விட்டு, திரும்ப முகாமுக்கு வந்த ஒரு ராணுவ வாகனம், அவர்களுக்கு அந்தச் சந்தர்ப்பத்தை அளித்தது.

வாகனத்தில் சில ராணுவ வீரர்களே இருந்தார்கள். காம்பவுண்டுக் கதவினருகே வாகனம் வந்து வேகம் தணித்ததும், கதவு திறக்கப்படும் வினாடிக்குள் ஏதோ ஒரு மரத்தின் பின்னாலிருந்து ரகசிய உத்தரவு கிறீச்சிட்டது. ‘கமான், குயிக்..’

அவர்கள் தடதடவென்று ஓடினார்கள். துப்பாக்கியால் சுட்டபடியே ஓடினார்கள். பின்புறம் வாகனக் கதவு திறந்து சில ராணுவ ஜவான்கள் கீழே இறங்கிக் கொண்டிருந்த சமயம் அது. கண்மூடித்தனமாகச் சுட்டுக்கொண்டே சென்ற லஷ்கரின் ஆட்கள், அவர்கள் அனைவரையும் சுட்டு வீழ்த்தியபடியே முன்னேறி, உள்ளே போன வாகனத்தின் பின்புறம் தொற்றிக் கொண்டே தாங்களும் உள்ளே ஓடினார்கள்.

என்ன நடக்கிறது என்று யாருக்கும் புரியவில்லை. முகாமின் வாசலில் இருந்த பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீஸின் அருகே வாகனம் நிற்க, அவர்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் அந்தக் கட்டடத்தின் வாசலை நோக்கிச் சுட்டபடியே உள்ளே பாய்ந்தார்கள். உள்ளே இருந்த ராணுவ அதிகாரிகள் சுதாரிப்பதற்குள் சுட்டுத் தள்ளிக்கொண்டே பாய்ந்து, கதவை அடைத்துக் கொண்டார்கள்.

ஒரு மேஜர் சுடப்பட்டு இறந்திருந்தார். பல ஜவான்கள் இறந்திருந்தார்கள். இதற்குள் சுதாரித்துக்கொண்ட இந்திய ராணுவத்தினர், கட்டடத்தைச் சூழ்ந்துகொண்டு எதிர்த் தாக்குதலைத் தொடங்க, அரை மணி நேரம் நீடித்த துப்பாக்கிச் சூட்டின் இறுதியில், பத்து ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டார்கள். வந்த இரண்டு லஷ்கர் தீவிரவாதிகளும் கூட.